காலத்திற்கு ஏற்ற
இறக்குமதிசெய்யப்பட்ட
பல பொருட்கள்
தாராளமாகக் கிடைக்கும்
- மணிக்கூடுகள்
- கசெட் றேடியோக்கள்
- 3 விசை மிக்சர்
- காப்பி கிறைண்டர்
- எலெக்ரோனிக் கருவிகள்

ஸி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன்: 284

★ ★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
# The EELA NADU

மலர்: 20 ஐப்பசி 16 ஜுல்ஹஜ்: 30 இதழ்: 262
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 2-11-78

ரோஷிபா
குளிர்சாதனப் பெட்டிகள்,
மின் விசிறிகள்.
சர்வதேச தரத்திலானது
உங்கள் இல்லங்களுக்கு
அவசியம் தேவை.
சிறிதளவே கையிருப்பில் உண்டு.
ஸி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் போன் 284-

★ கொப்பேகடுவ, இயன் விக்கிரமநாயக்க ★ மாவட்டநீதிபதி மனோகரா, ★ ஜயாபத்திரான, பௌஸி

# ஜனாதிபதி ஆணைக்குழுமுன்
# ஆஜராகுமாறு அழைப்பாணை!

(கொழும்பு)

முன்னாள் விவசாய காணிஅமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ, முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. ஜயாபத்திரான, முன்னாள் லஞ்சத்தடுப்பு திணைக்கள ஆணையாளர் திரு. இயன் விக்கிரம நாயக்க, கொழும்பு மாநகரசபை முன்னாள் மேயர் ஜனாப் ஏ. எச். எம். பௌஸி, மாவட்ட நீதிபதி திரு. ஸி. மனோகரா ஆகியோருக்கு விசேஷ ஜனாதிபதி ஆணைக்குழு, தம்முன்னிலையில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல், அதிகார துஷ்பிரயோகம் ஆகியவைபற்றி விசாரணை நடத்திவரும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் தெரிவிக்கப்பட்ட திரு. ஹெக்டர் கொப்பேகடுவவினதும் மற்றும் நால்வரினதும் நடவடிக்கைகள் தொடர்பாகவே ஆணைக்குழு நேற்றுஇந்த அழைப்பாணையை விடுத்தது.

## கொப்பேகடுவ

திரு கொப்பேகடுவ இம்மாதம் 16ம் திகதி தம்மீது சுமத்தப்பட்டுள்ள புகார்கள் தொடர்பாக விளக்கம்அளிக்க வேண்டும் என்றும், இம்மாதம் 22ம் திகதி விசேஷஆணைக்குழு முன்னிலையில் ஆஜராக வேண்டும் கமிஷன் உத்தரவிட்டுள்ளது.

## ஜயாபத்திரான

திரு. ஜயாபத்திரான இம்மாதம் 16ம் திகதி விளக்கம் அளிக்கவேண்டும் என்றும் 24ம் திகதி ஆஜராகவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளார்.

## இயன்விக்கிரமநாயக்க

திரு. இயன் விக்கிரமநாயக்க இம்மாதம் 23ம் திகதி விளக்கம் அளிக்கவேண்டும், 29ம் திகதி ஆஜராகவேண்டும்

## பௌஸி

ஜனாப் பௌஸி இம்மாதம் 16ம் திகதி விளக்கம் அளிக்க வேண்டும், 27ம் திகதி ஆஜராகவேண்டும்

## ஸி. மனோகரா

திரு. மனோகரா இம்மாதம் 16ம் திகதி விளக்கம் அளிக்க வேண்டும், 22ம் திகதி ஆஜராகவேண்டும் என்று ஜனாதிபதி விசேஷ ஆணைக்குழு அறிவித்துள்ளது. (இ)

---

சுதந்திரவர்த்தக வலயத்தில்

## 26 ஆயிரம் பேருக்கு முதலில் வேலை கிடைக்கும்

[கொழும்பு]

சுதந்திர வர்த்தக வலயத்தில் 46 தொழில் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு வெளிநாடுகள் முன்வந்துள்ளன

அமெரிக்கா 7 திட்டங்களையும், ஜப்பான் 16 திட்டங்களையும் ஆரம்பிக் முன்வந்துள்ளன மேற்கு ஜேர்மன், பிரான்ஸ், நோர்வே, பெல்ஜியம், டுபாய், ஈரான், மலேஷியா, சிங்கப்பூர், போன்ற நாடுகளுக்கு சுவிட்சர்லாந்து 3 திட்டங்களையும், இந்தியா 2 திட்டங்களையும், தாய்லாந்து 2 திட்டங்களையும், ஆரம்பிக்கவிருக்கின்றன.

இத்திட்டங்களில் 26 ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் இவர்களில் 14 ஆயிரம் பேர் உடைகள் தயாரிக்கும் திட்டங்களில் வேலை பெறுவர்

[6ம் பக்கம் பார்க்க]

---

தமிழக

அமைச்சரவையில்

## மாற்றங்கள் ஏற்படும்?

சென்னை, நவ. 1

தமிழக அமைச்சரவையில் விரைவில் பெரும் மாற்றங்கள் நிகழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவுக்குப் புறப்பட்ட தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன், டிசம்பர் மாத நடுப்பகுதியில் தாயகம் திரும்பவிருக்கிறார். அதன்பின்னர் தமிழக அமைச்சரவையில்பெரும் மாற்றங்கள் நிகழும் என்று கருதப்படுகிறது.

---

பல்கலைக்கழக மசோதா

## விவாதத்தை ஒத்திவைக்க நல்லூர் சிவா கோரிக்கை

(கொழும்பு)

பல்கலைக் கழக மசோதா நேற்று பாராளுமன்றத்தில் விவாதத்திற்குஎடுத்துக் கொள்ளப்பட்டபோது தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவரும் நல்லூர் எம். பி யுமான திரு. எம். சிவசிதம்பரம் ஒழுங்குப் பிரச்னையொன்றைக் கொண்டு வந்தார்.

மசோதாவின் சில ஷரத்துக்கள் அரசமைப்புக்கு முரண்படுவதாக உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பினை சபாநாயகர் சபையில் தெரிவித்த போதே திரு. சிவசிதம்பரம் மேற்படி கருத்தைத் தெரிவித்தார். இந்த மசோதா மீதுள்ள உயர் நீதிமன்றத் தீர்ப்பை அங்கத்தவர்கள் விபரமாகப் படித்து அறிவதற்கு அவகாசம் வேண்டும் என்றும் அதனால் விவாதத்தை 7ம் திகதி வைத்துக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

உயர் நீதிமன்றத் தீர்ப்பி

(6-ம் பக்கம் பார்க்க)

---

தனித்துவமான

## பல்கலைக்கழகங்களை ஆதரிக்க கூட்டணி முடிவு

(கொழும்பு)

பல்கலைக்கழக வளாகங்களை தனித்தியங்கும் பல்கலைக்கழகங்களாக மாற்றுவதென்ற அரசின் திட்டத்தை ஆதரிப்பதென்று தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது,

பல்கலைக்கழக மசோதாவில் அடிப்படை உரிமைகளை மீறும் பிரிவுகளை எதிர்ப்பதென்றும் குழு தீர்மானித்தது.

மாவட்ட அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண தொகுதிகளுக்கும் மன்னாருக்கும் வடபகுதி எம். பி.க்கள் சிலர் அப்பகுதி எம்பிக்களுடன் சேர்ந்து தொகுதி அபிவிருத்திகளைக் கவனிக்க நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலைக்கு திரு. எம். சிவசிதம்பரமும் மன்னாருக்கு திரு. வி. என். நவரத்தினமும், வவனியாவுக்கு திரு. திரு. திருநாவுக்கரசுவும் பட்டிருப்புக்கு திரு வி தர்மலிங்கமும் நியமிக்கப் பட்டிருப்பதாகத் தெரிகின்றது. [ம]

---

## இன்று வரும் அமைச்சர்

[யாழ்ப்பாணம்]

சமூக சேவைகள் அமைச்சர் திரு அசோகா கருணாரத்தின இன்று காலை யாழ்ப்பாணம் வருகிறார்

கைதடியிலும் கரவெட்டியிலும் சில நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதுடன் யாழ் செயலகத்தில் இடம்பெறும் மகாநாட்டிலும் அமைச்சர் கலந்து கொள்வார்

---

வன்செயல் தொடர்பாக கைதானவர்:

## மற்றுமொரு அணிவகுப்பிலும் அடையாளம் காட்டப்படவில்லை
## இன்று மீண்டும் அடையாள அணிவகுப்பு

[மாவிட்டபுரம்]

வெடிமருந்துக் கொள்ளை தொடர்பான அடையாள அணிவகுப்பிலும் சந்தேகநபரான சரவணமுத்து சற்குணசிங்கம் அடையாளம் காணப்படாததால், அக்குற்றச்சாட்டிலிருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வடபகுதி வன்செயல்கள் தொடர்பாக ஏற்கனவே கைதாகி தப்பியோடிய அளவெட்டியை சேர்ந்த மேற்படி சந்தேகநபர் அண்மையில் சங்கானை பொலிசாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது விளக்கமறியலில் ஆஜர்செய்யப்பட்டபோது விளக்கமறியலில் வைக்கப்பட்டு 3 சம்பவங்கள் தொடர்பாக அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்டபோது எவராலும் அடையாளம் காணப்படாமையால் அம்மூன்று குற்றச் சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டார்.

நேற்று மீண்டும் அடையாள அணிவகுப்புக்காக மூடிய வாகனத்தில் மல்லாகம் நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்ட மேற்படி சந்தேகநபர், பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க மாதகல் கிளையிலிருந்து 4600 ரூபா பெறுமதியான வெடிமருந்துகளைக் கொள்ளையடித்த சம்பவம் தொடர்பாக அடையாள அணி வகுப்புக்குட்படுத்தப்பட்டார்.

சாட்சியான மேற்படிசங்கக்

(6-ம் பக்கம் பார்க்க)

### பலாத்காரமுயற்சி:

# கோடுகலையும் வரை வாலிபருக்குச் சிறை

[வேலணை] பத்து வயது சிறுமி ஒருவர் மீது பலாத்காரம் பிரயோகிக்க முற்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வாலிபர் ஒருவரை ஊர்காவற்றுறை நீதிபதி திரு. வி. ஜெகசோதி எச்சரித்ததுடன் நீதிமன்றம் கலையும் வரை அவரைக் காவலில் வைக்கஉத்தரவிட்டார்.

சிறுமிக்குஅனர்த்தம்விளைவிக்கப்படவில்லையென்றும் பெற்றோர் வழக்கை நீடிக்கவிரும்பவில்லையென்றும் நீதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது.

சிறுமியின் தந்தையிடம் பிரஸ்தாப வாலிபர் நீதிமன்றத்தில் மன்னிப்பும் கேட்டுக்கொண்டார். [உ]

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல. ஈடு 14823

வட்டுக்கோட்டை கனகரத்தினம் நரேந்திரன்
வாதி

எதிராக

பொக்கணை, ஊரெழு 1. சோமசுந்தரம் கணபதிப்பிள்ளை,
சோமசுந்தரமும் பெண் 2. இந்திராதேவியும்
பிரதிவாதிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் ஈடு 14823-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1978-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் திகதி (30:11-78) வியாழக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

ரூபா 4,880-ம் 23-4-75 தொடக்கம் 9-11-76 வரைக்கும் ரூபா 3000/-க்கு 15 வீத வட்டியும், அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை 9 வீத வட்டியும், வழக்குச் செலவு ரூபா 546-75 சதமும், முத்திரைச் செலவு ரூபா 9/-ம், விற்பனையில் ரூபா 1,000 கழிபடவேண்டும்,

### ஆதன இடாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் கிழக்குப்பகுதி, கோப்பாய்க் கோவிற்பற்று, ஊரெழு இறை ",சீமந்தபுலம்'' நில பர. 8-ம் குளி 2½ யும் செய்பயிர் வான பயிர்களும். மேலும் கணபதிப்பிள்ளை செல்லையாவுக்கும் பெண் பாக்கியப்பிள்ளைக்குமுரிய வடக்கெல்லைக் காணியில் உள்ள பங்கும், இந்த நில பர. 8 குளி 2½ க்கும் எல்லை கிழக்கு வைத்திலிங்கம் ஞானசேகரம் பெண் சகுந்தலாதேவியினுதனம். வடக்கு 12 அடி அகல முள்ள ஒழுங்கை முகப்பும், கணபதிப்பிள்ளை செல்லையாவுக்கும் பெண் பாக்கியப்பிள்ளைக்குமுரிய ஆதனமும், மேற்கு பரராஜசிங்கம் பெண் செல்லம்மாவின் ஆதனம், தெற்கு தம்பையா நாகலிங்கத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், இதடங்கலும் அத்துடன் கணபதிப்பிள்ளை செல்லையாவுக்கும் பெண் பாக்கியப்பிள்ளைக்குமுரிய வடக்கெல்லைக் காணியின் கிழக்கெல்லை வழியாக வடக்கிலிருக்கும் ரோட்டுக்குச் செல்வதற்காக விடப்பட்ட 12 அடி அகல ஒழுங்கையில் பங்கும்.

செ. பாண்டித்துரை
கொமிஷனர், விலைமதிப்பாளர்.

மல்லாகம்
16-10-78

0704

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு

வழக்கு இல. ஈடு 12900

10, அம்மன்வீதி, யாழ்ப்பாணம், 1. டாக்டர் வீரவாகு கதிரவேலுப்பிள்ளை பரமநாயகம் காலஞ்சென்றவர். வாதி,
2. பரமநாயகம் ஸ்ரீகாந்தா காலஞ்சென்றவர், பதில் வாதி.
1. ஸ்ரீகாந்தா குமரேசன்
2. ஸ்ரீகாந்தா பிரமளாஷாளினி
3. ஸ்ரீகாந்தா மைதிலி வான்மதி
பதில்வாதிகள்.

எதிராக

120/3, அரசடி ரோட்டு, கந்தர்மடம், யாழ்ப்பாணம். சின்னையா நடராசா சண்முகநாதன், பிரதிவாதி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் ஈடு 12,900-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1978-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ந் திகதி (27-11-78) திங்கட்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

ரூபா 17,517/-ம், 28-12-1971 தொடக்கம் 21-11-1972 வரைக்கும் ரூபா 13,000/- க்கு 12 வீத வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், வழக்குச் செலவு ரூபா 585-40 சதமும். இதில் ரூபா 3,000;-ம் தீர்வையால் கொடுபட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் பகுதியும் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை, "சொட்டிதாழ்வு'' நில பர 6 குளி 13½-ம் கிணறும், பயிர்களும், கல்வீடும். எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு கந்தையா பெண் சரஸ்வதிக்கும், தர்மராசா பெண் கனகம்மாவுக்குமுரிய ஆதனம், மேற்கு கந்தையா கனகரத்தினத்துக்கும் பெண் அன்னம்மாவுக்குமுரிய ஆதனம், தெற்கு கருணாநிதி பெண் அன்னபூரணத்தினுதனம். இதடங்கலும்.

செ. பாண்டித்துரை
கொமிஷனர், விலைமதிப்பாளர்.

மல்லாகம்
16-10-78

0705

---

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லநிலைமையில் சொந்தப் பாவிப்பில் இருக்கும் ஸ்ருவார்ட் சிக்சாக் (STEUART ZIG ZAG MODEL) கால் தையல் மெசின் ஒன்றும் இங்லிஸ் மேக் பெண்பிள்ளைகள் பாவிக்கும் சைக்கிளும் விற்பனைக்கு உண்டு. 179 நாவலர் வீதி, வண்ணார் பண்ணை. 0709

---

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம் நல்லூர் பருத்தித்துறை வீதி 177-ம் இலக்கத்தில் வதிந்த வைத்திலிங்கம் சிங்கவேலுவின் மனைவி தேவசேனு என்பவரின் மரண சாதனம் இல்லாத மரணச்சொத்து விடயமாக

மரணமெய்தியவர்

வைத்திலிங்கம் சிங்கவேலு, இல. 177, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தற்போது கல்வளை, சண்டிலிப்பாய்.

மனுதார்

மரணசாதன ) இல.
நியாயாதிக்க ) ரி/3250

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்குமேலெபெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979ம் ஆண்டு தை மாதம் 12ம் திகதி நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறுபதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்

1978-ம் ஆண்டு ஐப்பசி மாதம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

வரைவு:
சு. செ. மகாதேவா.
மனுதாரின் சட்டத்தரணி.

0706

---

## பனை அபிவிருத்திச் சபை

இச்சபை, பனை ஓலைக் கைப்பணிப் பொருட்களைச் செய்வதில் பயிற்சியளிக்கும் நெறியொன்றை விரைவில் ஆரம்பிக்க உள்ளது. பயிற்சிநெறி ஒவ்வொன்றும் ஒரு மாதகாலம் நடைபெறும். பயிற்சிக் காலத்தின்போது கைச்செலவுக்கு நியாயமானஅளவு பணம் கொடுக்கப்படும். அவ்வாறு பயிற்றப்படுபவர்களிடையேயிருந்து தரக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்களும், போதனாசிரியர்களும் தெரிவுசெய்யப்படுவர் பயிற்சியின் பின்னர், பயிற்சிபெறுநாகள் செய்த கைப்பணிப்பொருட்கள் அவற்றின் தரத்திற்கமைய இச்சபையால் கொள்வனவு செய்யப்பெறும். மரஞ்சீவுபவர்களுக்கான பயிற்சிநெறியொன்றும் விரைவில் ஆரம்பிக்கப்படும். இப்பயிற்சிநெறி இரண்டு மாதங்கள் நடைபெறும். கைப்பணிப்பொருட்கள் செய்வதிலும் மரம் சீவுவதிலும் பயிற்சிபெற விரும்புவோர் பின்வரும் விவரங்களை உடனடியாக அளித்தல் வேண்டும்.

(அ) முழுப்பெயரும் வதிவிட முகவரியும்.
(ஆ) வயது, பிறந்த தேதி, பால்.
(இ) முன் அனுபவமுண்டாயின், அதன் விபரம்.
(ஈ) கல்வித்தகைமைகள்.

பனம் கைப்பணிப் பொருட்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள மரபுவழிக் கைப்பணியாளர்களும் ஏனையோரும் தம்மை இச்சபையிற் பதிவுசெய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். பதிவு செய்பவர்கள் பின்வரும் விவரங்களை அளித்தல் வேண்டும்.

[அ] பெயரும், வதிவிட முகவரியும்.
[ஆ] வயது, பால்.
[இ[ தயாரிக்கப்படும் கைப்பணிப்பொருள் வகைகள். (மாதிரிப்பொருள் அனுப்புக; அவை சுட்டுத் துண்டிட்டு விலைகள் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
[ஈ[ விண்ணப்பகாரர் கிழமைதோறும் / மாதந்தோறும் ஒவ்வொரு வகையிலும் வழங்கக்கூடிய தொகை.
[உ] பனம் கைப்பணிப் பொருட்களைச் செய்வதில் விண்ணப்பகாரருக்குள்ள சிறப்பறிவுகள்.

இவ்வாறே பனம் உணவுப்பண்டங்கள் தயாரிப்பவர்களும், 2-ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை அளித்து, தம்மைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பித்துக் கொள்ளல் வேண்டும்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டடம்,
யாழ்ப்பாணம். 0711

---

JAFFNA MUNICIPALITY
MULTI-PURPOSE CO-OPERATIVE SOCIETY LIMITED

## POST OF ACCOUNTANT GRADE I

Applications are invited from Citizens of Sri Lanka by descent for the Post of Accountant Grade I in the Jaffna Municipality Multi-Purpose Co-operative Society Limited.

Qualifications:
(1) Pass in Parts I, II and III of the Institute of Cost and Works Accountants or Intermediate Grade Chartered Accountants Examination and two years Experience, or Parts I, II and III of A. C. C. A
(2) Graduate with Accountancy as a subject and 2 years experience, or
(3) Ex-Co-operative Inspectors with 10 years experience.

Age: 30-50.

Salary: Rs. 500 — 825 (Salary on the scale 20x10, 25x5 negotiable)

Security: Rs. 3,000/- cash and Rs 10,000/- Property.

Closing Date: Applications should be sent under registered cover to reach the Secretary Jaffna Municipality Multi-Purpose Co-operative Society Limited, 74/3, Hospital Road, Jaffna on or before 15th November, 1978.

PRESIDENT
JAFFNA MUNICIPALITY MULTI-PURPOSE CO-OPERATIVE SOCIETY LIMITED.

0715

---


# மங்களகரமான திறப்புவிழா

## ஆ. க. கனகசபாபதி சன்ஸ்,

106, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

காலம்: 2-11-1978 வியாழக்கிழமை பகல் 12 மணி

கௌரவவிருந்தினர்:
சு. கோபாலகிருஷ்ணன்
(முகாமையாளர், ஹட்டன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம்)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொலைபேசி: 457

ஆ. க. கனகசபாபதி சன்ஸ்
நிறுவனத்தார்.
யாழ்ப்பாணம்.

0608

ஈழநாடு
The Eelanaadu

## தொலைபேசிக் கட்டணம்

தொலைபேசி அழைப்புக்களுக்கான கட்டணம் நேற்று முதல் அதிகரிக்கப் பட்டிருக்கிறது. சாதாரண நேரடி அழைப்புக்களுக்கான கட்டணம் இருபத்தைந்து சதத்திலிருந்து முப்பதுசதமாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. தொலைபேசி மூலம் அனுப்பப்படும் தந்திகளுக்கான கட்டணமும் தூர இடங்களுக்கான தொலைபேசிக்கட்டணமும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

எல்லாமே அதிகரிக்கும் போது தொலைபேசிக்கட்டணமும் அதிகரிப்பதில் ஆச்சரியமில்லை.

ஆனாலும் தொலைபேசிச் சேவை சீராக இருந்தால் கட்டணம் அதிகரித்தாலும் பரவாயில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புடன் தொலைபேசியில் தொடர்பு கொள்வதென்பது சுலபமல்ல. எட்டு மணிநேரம் பத்து மணிநேரம் தாமதம் அல்லது ''அவுட் ஒப் ஓடர்'' என்று தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்திலிருந்து பதில் வரும். மட்டக்களப்புடன் யாழ்ப்பாணத்திலிருந்து தொலைபேசியில் தொடர்பு கொள்ளவே முடியாது. கொழும்பிலிருந்து புதுடில்லிக்கும் நியூயோர்க்கிற்கும் சிலநிமிடங்களுக்குள்ளேயே தொலைபேசி அழைப்புக் கிடைத்துவிடும் தெளிவாகவும் இருக்கும். செய்மதி மூலம் இந்தவசதி செய்யப் பட்டிருக்கிறது. ஆனால் உள்நாட்டில் தொலைபேசி அழைப்பு உடனுக்குடன் கிடைப்பதற்கான வசதிகள் இல்லை

ஆண்டுதோறும் தொலைபேசிக்கு ஒரு தொகையைக் கொடுத்துக் கொண்டு தொலைபேசி உபயோகமில்லாமல் இப்போது கட்டணத்தையும் அதிகரித்திருப்பதால் என்ன பயன்.

தந்திகளுக்கு அதிக கட்டணம் செலுத்துகிறோம். தந்திகளோ தபாலில் சாவகாசமாகப் போய்ச்சேருகின்றன

தொலைபேசிக் கட்டணத்தை அதிகரித்தால் போதாது. தொலைபேசிச் சேவையைச் சீராக்குவதற்குத் தபால் தந்தி அமைச்சு இனியாவது நடவடிக்கை எடுக்கமுன்வரும் என்று எதிர்பார்ப்போம்.

# நல்லூரில் ஸ்கந்தசஷ்டி விழா

ஸ்கந்தசஷ்டி விரதம் நேற்று புதன்கிழமை ஆரம்பமாகியுள்ளது. முதல் ஆறு நாட்களுக்கு பாடல்பெற்ற முருக ஸ்தலங்களாகிய திருச்செந்தூர், பழநி முதலிய ஷேத்திரங்களிலும் எங்கள் இலங்கையிலுள்ள பிரபல முருகன் கோவில்களிலும் ஸ்கந்தசஷ்டி விழா சிறப்பாக நடக்கும். தேவர் சிறைமீட்டு அசுரர்களை அழித்த முருகனின் திருவிழாக்களில் இந்த ஸ்கந்தசஷ்டி திருவிழாவும் ஒன்று. எங்கள் நல்லைப்பதியில் நேற்றுத் தொடங்கி ஆறுநாளும் திருமுருகனுக்கு விசேஷ ஆராதனைகளும் தெருவீதி உலாவும் நடைபெறும். ஆறும் நாளாகிய சூரசங்ஹார திருவிழா அன்று பிற்பகல் 4மணியளவில் ஆறுமுகன் எழுந்தருளி முறையாக கஜமுகன், தாரகன், சிங்கமுகன், சூரபத்மன் முதலிய அரக்கர்களை வதம்செய்து இறுதியாக வடக்கு வீதியில் சூரசங்ஹாரம் நடந்து சூரபத்மன் சேவலும் மயிலுமாய்த் தோன்றி எம்பெருமானுக்கு அடிபணியும்காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும். உலகம் உய்யும் பொருட்டு கந்தவேள் செய்த பல அற்புதங்களில் சூரசங்ஹாரமும் ஒன்று.

பழனித் தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தான 'பழனித் தல வரலாறும் திருக்கோயில் வழிபாடும்' என்ற வெளியீட்டில் சஷ்டி விழாவாகிய சூரசங்ஹாரத்தின் தத்துவம் என்னும் பந்தியில் இருந்து சில பகுதிகளைத் தருகிறோம்.



### உற்சவ தத்துவமும், கொண்டாடும் முறையும்

கந்தசஷ்டி உற்சவதத்துவப் பொருள்; கந்தசஷ்டி நோன்பு நோற்பவர் தவநெறியாளர்; தத்துவத்துக்கு லட்சியம் பேரின்பம்; இன்பமாகடல் சிவம்; அவர் பேராற்றல் உடையவர்; அவர் இரக்கமே திருமேனியாக உடையவர், அதுவே அருள்; அருளேசக்தி; அந்த அருள் எல்லரப் பக்குவான்மாக்களுக்கும் பெருங்கேடு சூழும் மும்மலங்களை நீக்கும் வண்ணம் ஞானத்தை நல்குவதே (நமது ஞானதண்டாயுதபாணிக்கு உமாதேவியார் சூரசங்காரத்தின் பொருட்டு) வேலாயுதத்தைத் தந்தருளிய குறிப்பாகும்.

### தாரகன் வதை

மாயா மலத்தை நீக்கியதாகும். கிரவுஞ்சகிரியைப் பிளந்தது சஞ்சிதத்தை நீக்கியதாகும். பானுகோபன் முதலியோரைக்கொன்றது மோகம் முதலியவைகளை அழித்ததாகும். சிங்கமுகனை சங்கரித்தது கன்ம மலத்தை அழித்ததாகும்.

### சூரபத்மன் வதை

சங்காரம் என்பது மன வலியை ஒடுக்குதல். சூரபத்மனை வதைத்தது உயிர்களுக்கு நேரும் எவ்வகைப் ட்ட துன்பங்களுக்கும் காரணமாகிய ஆணவமலத்தின் வலி கெடுத்ததாகும், சூரபத்மன் சக்கிரவாளப்பறவையாகி பூதகணங்களை வருத்தினன். முருகப்பெருமான் இந்திரனாகிய மயில் மேலேறி அதை வெட்டினர். சூரபத்மனுக்கு முருகப்பெருமான் காட்சிதந்தார் அதைக் காணும் அறிவையும் தந்தார். அவன் கண்டு பேரானந்தமடைந்தான். பின்பு அவன் பழையவாசனை தலைப்பட முன்போல் போருக்கு வந்தான் மாமரமாகி நின்றான். முருகப்பெருமான் விட்டவேல், அதனை இரு கூறாகப் பிளந்தது அவ்விருகூறும் மயிலும் சேவலுமாகிவந்தது. முருகப்பெருமான் மயிலை வாகனமாகக் கொண்டருளினர். சேவலைக் கொடியாகக் கொண்டருளினர். இங்ஙனம் சூரபதுமன் இருவரும் முருகப்பெருமான் திருவருள் நோக்கம்பெற்று இன்றும் அவரது பதத்தைப் பெற்று வாழ்கின்றார்கள். கொடிய சூரனும் தவத்தினால் முருகப்பெருமான் திருவருளுக்கு உரியன் ஆனான் என்றால் அந்தப்பெருமானுடைய திருவடிகளையே தஞ்சம் என்று வணங்குவோர்க்கு அவர் அருள் சுரப்பார் என்பது கூறவும் வேண்டுமோ? அவர் சூரனதியோர் பொருட்டு போருக்குச் சென்றது நவவீரர்களோடும் பூதகணங்களோடு மட்டும் சென்றருளினர். இரண்டு தேவிமார்களோடு செல்லவில்லையென்பதனையும், மாலைக் காலத்திலேயே சூரன் முதலியோரை சங்கரித்து இந்திர விமானம்ஏறி திருச்செந்தூருக்கு எழுந்தருளி பின்புதான் இந்திரன்வேண்ட திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளி தெய்வயானை அம்மையாரைத் திருமணம்புரிந்தருளி, பின்பு வள்ளியம்மையாரையும் திருமணம்செய்து, ஸ்ரீவள்ளி தேவசேன சமேத சண்முகப் பெருமான் எல்லோருக்கும் காட்சிதந்து இன்றும் என்றும் பக்தர்களுக்கு அருள் புரிகின்றான் என உணர்ந்து, இதில் கூறப்பட்ட உற்சவ வரம்பை அனுசரித்து உற்சவத்தை நடத்திக் கந்தப் புராண வரம்பைப் பாதுகாத்து இன்புறுக. அன்பர்களும் இந்த உண்மையை உணர்ந்து இன்ப வாழ்வுபெற்று வாழ்க

-- செ. இரத்தினசபாபதி --

நல்லூரில் ஆறுமுகப்பெருமான் வெளிவீதி வந்து அடியார்களுக்குக் காட்சி கொடுப்பது ஆண்டில் நான்கு முறையே. இதில் சூரசங்காரத் திருவிழாவும் ஒன்று ஸ்கந்தசஷ்டி ஆறும் நாள் ஐப்பசித் திங்கள் 20 ம் நாள் திங்கட்கிழமை சூரசங்காரத் திருவிழா நடைபெறும். அடுத்த நாள் செவ்வாய்க்கிழமையன்று ஆறுமுகனுக்கு திருக்கல்யாணம் வெகு சிறப்பாக நடைபெறும் நல்லூரில் இத்திருக்கல்யாண வைபவங்கள் ஆண்டுதோறும் மூன்று முறை நடைபெறுகின்றன. உற்சவ இறுதியில் நடப்பது ஒன்று அது முத்துக்குமார சுவாமிதிருக்கல்யாணம். மற்றது சூரசங்ஹார இறுதியில் ஆறுமுகசுவாமிக்கு நடைபெறும் திருக்கல்யாணமாகும். இடையே கற்பூரத்திருவிழா வன்று இன்னொரு திருக்கல்யாணம் இப்பொன்னை ஆறு தினங்களிலும் ஸ்கந்தசஷ்டிகவசமும், பாம்பன்சுவாமிகள் அருளிய ஷண்முககவசமும் காலை மாலைகளில் பாராயணம் செய்தால் மிக நன்று. [அ]

## மணிவாக்கு

பேராசையையும் பொறாமையையும் பணத்தை அபரிமிதமாகச் சேர்ந்தலையும்விட்டு ஒழி.

—ஸ்ரீசுவாமி சிவானந்தசரஸ்வதி

## இன்று கூடி ஆலோசிப்பர்

(முல்லைத்தீவு)

போக்குவரத்து வசதியீனங்கள் பற்றிய தீர்மானங்களைத் துரிதமாக அமுல்நடத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று மாலை முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில், திரு. மகேந்திரன் செல்லத்தம்பு, உதவி அரசாங்க அதிபர், கிராமமுன்னேற்றச் சங்கத்தலைவர் ஆகியோரின் தீர்மானங்கள் பற்றி பரிசிலனை செய்யப்படும்.

வடபிராந்திய பொது முகாமையாளர் திரு. கே. பி. ஏ பெரேரா கலந்து கொள்வார். (க-அ)

"பெரியகல்லூரிகளில்

# இடவசதியின்மையாலேயே முதலாம்வகுப்புக்குத்தடை"

## வட மாநிலக்கல்வி அதிபர் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

",பெரிய கல்லூரிகளான தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி ஆகியவற்றில் போதிய இடவசதியில்லாததாலேயே இக்கல்லூரிகளில் முதலாம்வகுப்பு நிறுத்தப்பட்டுள்ளது ''

வடமாநிலக் கல்வியதிபதி திரு. த. மாணிக்கவாசகர், ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் பாடசாலைத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினர்.

பெரிய கல்லூரிகளில் முதலாம் வகுப்புக்குத் தடை விதிக்கப்பட்டது பற்றி அவர் மேலும் கூறியதாவது:

''இப்பெரிய கல்லூரிகளுக்கு அருகில் ஏழு அல்லது எட்டு சிறிய பாடசாலைகள் இருக்கின்றன. இப்பாடசாலைகளில் கட்டட வசதிகளிலிருந்தும் போதியளவு வசதிகளிலிருந்தும் முதலாம் வகுப்புகளில் பிள்ளைகள் குறைவாக இருக்கிறது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இப்பாடசாலைகளில் சேர்த்து ஒத்துழைப்பு வழங்கவேண்டும். 2 மைல் சுற்றுடலில் உள்ள இச்சிறிய பாடசாலைகளில், தங்கள் பிள்ளைகளை முதலாம் வகுப்பில் சேர்ப்பதன் மூலம் பல பிரச்னைகளுக்குத் தீர்வு காணலாம்.'' [க-அ]

## குளங்கள் சீரமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சித் தொகுதியில் உள்ள பல குளங்கள் சீரமைக்கப்படவுள்ளன. இதற்கான ஆரம்ப வேலைகள் நில அளவைத் திணைக்களத்தினல் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

அம்பாள் குளம், கந்த(ன்) குளம், கனகபுரக்குளம், ஒட்டன் குளம், முறிப்புக்குளம் ஆகியனவே சீரமைக்கப்படவுள்ள குளங்களாகும் இக்குளங்களின் அணைக்கட்டுக்கள் உயர்த்தப்படவுள்ளன. [நெல்-உ]

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பரிசளிப்பு விழாநாளை மாலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக நல்லூர் எம். பி திரு எம். சிவசிதம்பரம் கலந்து கொள்வார்.

## இணைப்புப் பாலம்

(மட்டக்களப்பு)

அரசடிச்சேனை வைக்கோல் கொள்வனவு நிலையத்தில் இணைப்புப் பாலம் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது. பாலமின்மையால் வைக்கோல் விநியோகிப்பவர்கள் குறைபட்டுவந்தார்கள்.

மேற்படி இணைப்புப் பாலம் நிறுவித் தரும்படி விநியோகிப்பாளர்கள் தேசிய கடதாசி ஆலைக் கூட்டுத்தான நிருவாகத்தை தொடர்ந்து வற்புறுத்தி வந்ததையடுத்து தற்போது மேற்படிபாலம் அமைக்கப்பட்டு வருகின்றது. (உ)

## வீதிதிருத்தம்

(நெல்லியடி)

பொதுமக்களின் புகாரினை அடுத்து கரணவாய் பிரதான வீதி செப்பனிடப்பட்டு வருகின்றது. கரணவாய் பகுதி மக்கள் யாழ்.பிரதான பொறியியல் அதிகாரிக்கு இவ்வீதியைக் காண்பித்து புகார் செய்திருந்தார்கள் வீதியின் நிலைமை நேரில் பார்வையிட்ட பொறியியல் அதிகாரி திரு. ஜீ. கணேசரட்ணம் உடனடியாக இவ்வீதியை செப்பனிடுமாறு தமது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

திரு.எஸ். கந்தசாமித்துரை என்னும் தொழில் நுட்ப அதிகாரியின் மேற்பார்வையில் இக்கரணவாய் வீதி செப்பனிடப்பட்டு வருகின்றது. (உ)

# ஈரானில் எண்ணெய் ஊழியர்கள் வேலைநிறுத்தம்! நாளாந்தம் 5 கோடி டாலர் நஷ்டம்

டெஹ்ரான், நவ. 1 உலகின் 2-வது பெரிய எண்ணெய் ஏற்றுமதி நாடான ஈரானில் எண்ணெய்க் கம்பனிகளில் பணிபுரியும் ஊழியர்கள் கடந்த 2 வாரங்களாக மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தம் காரணமாக நாளொன்றுக்கு 5 கோடி டாலர் நஷ்டம் ஏற்படுவதாக ஈரானியசெய்திகள் தெரிவிக்கின்றன.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறும் எண்ணெய்க் கம்பனிகளில் பணிபுரியும் வெளிநாட்டவர்களை வேலைநீக்கம் செய்யவேண்டும், 12 நகரங்களில் அமுல் செய்யப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவை உடன் ரத்துச்செய்ய வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்செய்துவருகின்றனர்.

இப்போது எண்ணெய்க் கம்பனிகளை இராணுவம் பொறுப்பேற்றுள்ளது.

இக் கம்பனிகளை நாசப்படுத்தப் போவதாக வேலைநிறுத்தக்காரர்கள் அறிவித்ததை அடுத்தே இராணுவம் இக்கம்பனிகளைப் பொறுப்பேற்றுள்ளது.

இவ் வேலை நிறுத்தம் காரணமாக பிரிட்டன், இத்தாலி, மேற்கு ஜெர்மன் ஆகியமேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கான எண்ணெய்விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

### 43 பேர் பலி!

வேலைநிறுத்தக் காரர்களுக்கும் ஆயுதப்படையினருக்கும் நேற்று இடம்பெற்ற மோதலில் 43 பேர் பலியாகினர் என்றும் 58 பேர் படுகாயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

# 100 ரூபா கட்டமறுத்த கணவனுக்கு 1 வருடச்சிறை!

(கொடிகாமம்)

100 ரூபா தாபரிப்பு பணம் கட்ட மறுத்தவருக்கு சாவகச்சேரி நீதவான் திரு பெர்ணன்டோ ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்தார்.

முகாவிலைச் சேர்ந்த சுப்பிரமணியம் என்பவர் அவரது மனைவி புவனேஸ்வரிக்கும் 4 பிள்ளைகளுக்கும் 200 ரூபா தாபரிப்பு பணம் கட்டுமாறு நீதவான் தீர்ப்பளித்துமுதலில் 100 ரூபாவைக் கட்டுமாறு தெரிவித்தார்.

இத்தீர்ப்பை ஏற்கமறுத்து கணவன் பணம் கட்டமாட்டேன் என்றார் இதனை தொடர்ந்து ஒருவருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. [க]

## வல்லைவெளி அபிவிருத்தியாகும்

(நெல்லியடி)

தரைகளாக இருக்கும் வல்லைவெளி மிக விரைவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. வல்லையிலுள்ள கூட்டுறவு வைத்தியசாலையை அண்மித்த பகுதிகள்தான் முதலில் அபிவிருத்தி செய்யப்படும்.

இத்தகவலை உடுப்பிட்டி எம் பி திரு ரி. இராசலிங்கம் தெரிவித்தார்

இதுபற்றி மேலும் அவர் தெரிவித்ததாவது:-

வல்லையிலுள்ள யாழ்ப்பாணம்- நெல்லியடி வீதியில் குடியேற்றத்திட்டம் அமைக்கப்படும். அங்கு குடியேறுவோருக்கு பாடசாலை வசதி, நீர் வசதி என்பவும் மற்றும் மின்சார வசதிகளும் செய்து கொடுக்கப்படும். (உ)

மத்தியகிழக்கு அமைதி:

# இஸ்ரேல்-எகிப்து தலைவர்கள் டிச. 9-ல் கைச்சாத்திடுவர்

## பாராளுமன்றத்தில் பெகின் அறிவிப்பு

ஜெருஸலம், நவ. 1 மத்திய கிழக்கு அமைதி தொடர்பான எகிப்திய இஸ்ரேல் சமாதான ஒப்பந்தம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 9-ம் திகதி கைச்சாத்திடப்படும் என இஸ்ரேலிய அதிபர் திரு. மெனுச்செம்பெகின் தெரிவித்தார்.

இஸ்ரேலியப் பாராளுமன்றத்தில் நேற்று உரைநிகழ்த்துகையிலேயே திரு பெகின் மேற்கண்டவாறு கூறினார்

டிசம்பர் மாதம் 10-ம் திகதி தாம் நோபல் பரிசைப்பெற உள்ளதாகவும் அதற்கு முதல் நாள் மத்திய கிழக்கு அமைப்பு ஒப்பந்தத்தில் தாமும் எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத்தும் கைச்சாத்திட உள்ளதாகவும் திரு. பெகின் குறிப்பிட்டார்.

### அமெரிக்கா செல்கிறார்

அமெரிக்காவுக்கு இன்று தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டுசெல்லும் திரு பெகின் கைப்பற்றப்பட்ட அரபு பிரதேசங்களில் இஸ்ரேலிய குடியேற்றம்பற்றி அமெரிக்க அதிபர் திரு, ஜிம்மி கார்ட்டருடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

திரு பெகின், அமெரிக்காவிலிருந்து உத்தியோக பூர்வ விஜயம்ஒன்றை மேற்கொண்டு கனடா செல்வார். (இ)

## 20 கோடி ரூபா பட்டாசு

சென்னை, நவ 1 தீபாவளிப் பண்டிகையை ஒட்டி இம்முறை சிவகாசியில் 20 கோடிரூபாவுக்கு பட்டாசுகள் உற்பத்தி செய்யப்பட்டன. [இ]

சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டாவிட்டால்

# சிக்மகளூருக்கு மத்திய பொலிஸ் படை

### மத்திய அரசு எச்சரிக்கை

புதுடில்லி, நவ. 1 சிக்மகளூர் தொகுதியில் சட்டமும் ஒழுங்கும் நிலைநிறுத்தப்படாவிடின் அங்கு மத்திய றிசேர்வ் பொலிஸ் படையினர் நிறுத்தப்படுவர் என்று மத்திய அரசு எச்சரித்துள்ளது.

சிக்மகளூரில் அடுத்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ள இடைத்தேர்தல் காரணமாக அங்கு சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து வருகின்றது என்றும் இரண்டு நாட்களுக்குள் இந்நிலை கட்டுப்படுத்கப்படாவிட்டால் மத்திய பொலிஸ் படையை சிக்மகளூரில் நிறுத்தப் போவதாகவும் மத்திய அரசு அறிவித்துள்ளது.

### நடிகை நந்தலா தாக்குதல்

இதேவேளையில், திருமதி காந்திக்கு எதிராக சிக்மகளூரில் அமைதி ஊர்வலம் நடத்திய நடிகை நந்தலா என்ற சினிமா நடிகையும் அவரது குழுவினரும் பொலிசாரால் தாக்கப்பட்டனர்.

இத்தாக்குதலில் நடிகையும் 3 பத்திரிகையாளர்களும் உட்பட 11 பேர் படுகாயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. [இ]

# வெளிநாட்டுப் பயணம் நாட்டுக்கு நன்மைதரும்

## எம். ஜி. ஆர். நம்பிக்கை

சென்னை, நவ. 1 'எனது வெளிநாட்டுப் பயண அனுபவம், தமிழ் நாட்டுக்கும் இந்தியாவுக்கும் பெரும் பெரும் பலன் அளிக்கும் என நம்புகிறேன்.'

இவ்வாறு தமிழக முதல்வர் திரு. எம் ஜி இராமச்சந்திரன் கூறினார்.

தமிழக கவர்னர் திரு. பிரபுதாஸ் பட்வாரியினால் அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

கவர்னர் அளித்த விருந்தில் திருமதி ஜானகி இராமச்சந்திரன் எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு கருணாநிதி, முன்னாள் ஜனாதிபதி திரு. வி. வி. கிரி, ஆச்சார்யா கிருபளானி ஆகியோரும் கலந்துகொண்டனர். [இ]

"எம்மை அடிமைகளாக வைத்துக்கொண்டு

# எல்லாரும் சமம் என்பது தார்மீகப்பேச்சாகாது"

(யாழ்ப்பாணம்)

"இந்த நாட்டிலே பெரும்பான்மை இனத்தலைவர்கள் தமிழர்களை அடிமைநிலைக்குத் தள்ளிவிட்டு அனைவரும் சமம் என்று பேசுவது தார்மீகப் பேச்சாகாது."

இவ்வாறு ஊர்காவற்றுறை எம் பி பண்டிதர் கா. பொ இரத்தினம் புங்குடுதீவில் சமூகத் தொண்டர் திரு வே, க. சோமசுந்தரத்திற்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவைத் தொடக்கிவைத்துப் பேசுகையில் கூறினார்.

அவர் தமதுஉரையில் கூறியதாவது:

"புதிய அரசியலமைப்பின்படி இலங்கையில் இரண்டாந்தரப் பிரஜைகளாக எவரும் இருக்கமாட்டார்கள்" என்று மட்டக்களப்பில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் பிரதம அமைச்சர் பிரேமதாசா கூறியிருக்கிறார். புதிய அரசியல் அமைப்பு தமிழ்மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகத்தானும் ஆக்கவில்லை, அடிமைகளாகவே ஆக்கியுள்ளது.

பார்க்குமிடமெங்கும், கேட்கும் பேச்சுக்களிலும், அரசாங்க நடவடிக்கைகளில் எல்லாம் தமிழரின் அடிமைத்தனம் பளிச்சிடுகின்றது பாராளுமன்ற நுழைவாயிலில் உள்ள தனிச்சிங்களச்சொற்கள் அவ்வாயிலினூடாகச் செல்லும் தமிழர்களை நீங்கள் மொழி உரிமையில்லாத அடிமைகள் என்று பல்லாண்டுகளாகப் பகர்ந்துவருகின்றன. இச்சிங்களச் சொற்களுடன் தமிழ்ச் சொற்களையும் எழுதுவித்தற்கு நான் மூன்றுண்டுகளாகச் செய்துவரும் முயற்சி இன்னும் முடியவில்லை. நாம் அடிமைகளாக இருக்காமல் ஆளுகிறவர்களாக இருந்தால் இதனை மூன்றுமணிநேரத்தில் செய்விக்கமுடியுமென்பதைப் பிரதமர் மறுக்கமுடியுமா?

"சிங்கள மாவட்டங்களில் இ போ ச பஸ்களில் சேரிடப் பெயர்களை எழுதும் பலகைகளில் தமிழ் வேண்டுமன்றே புறக்கணிக்கப்பட்டது நான் பாராளுமன்றத்தில் சுட்டிக் காட்டியபின் எல்லாப்பலகைகளிலும் தமிழைச் சேர்க்குமாறு பணிக்கப்பட்டது இதன்பின் சிங்களத்தினைப் பெரிய எழுத்திலும். தமிழை இலகுவில் வாசிக்கமுடியாத சிறிய எழுத்திலும் எழுதுகிறார்கள், ஆளும் சிங்களமொழியுடன் அடிமைத் தமிழ்மொழிக்கு சமஉரிமை-சம அளவுகொடுக்க முடியுமா? என்கிறார்கள்.

"தமிழ்ப்பகுதிகளிலே தமிழ் தெரியாத சிங்கள உத்தியோகத்தர்கள் ஆட்சிநடத்துகிறார்கள் சிங்களப் பகுதிகளிலே சிங்களம் தெரியாத உத்தியோகத்தர்கள் எவருமில்லையே! தமிழர்கள் அடிமைகளாயிருக்காமல் ஆளுகிறவர்களாயிருப்பின் தமிழ்ப்பகுதிகளில் தமிழ் தெரியாத உத்தியோகத்தர்களுக்கு இடமிருக்குமா?

மன்னார் தவிர்ந்த மாவட்டங்களில் தமிழ்தெரியாத சிங்களவரே அரசாங்க அதிபர்களாகக் கடமையாற்றுகிறார்கள். மன்னாரிலுள்ள தமிழ் அரசாங்க அதிபரும்மாற்றப்பட்டு ஒரு சிங்களவர் நியமிக்கப்பட்டார். எங்கள் தலையீட்டினால் அது நிறுத்தப்பட்டுள்ளது தமிழர்கள் அடிமைகளாக இருக்காவிடின் தமிழர்களையே அரசாங்க அதிபர்களாக நியமிப்பார்கள் அன்றோ? சிங்களப் பகுதிகளில் சிங்களவர் அரசாங்க அதிபர்களாகலாம். தமிழ்ப் பகுதிகளில் தமிழர்கள் அரசாங்க அதிபர்களாக முடியாதே! திருகோணமலைக்கு நியமிக்கப்பட்ட ஒரு மேலதிக அரசாங்க அதிபர் தமிழர் என்ற காரணத்தால் மாற்றப்பட்டு அவருடைய இடத்தில் இப்பொழுது இரண்டு மேலதிக அரசாங்க அதிபர்கள் ஒருவர் தமிழர் ஒருவர் சிங்களவர்- நியமிக்கப்பட்டதேன். தமிழர்களுக்கு இந்நாட்டில் ஆட்சி உரிமை இருப்பின் இது நடைபெறுமா?

### தமிழர்களுக்கு ஆட்சியுரிமைஇருப்பின்.

தமிழ்ப்பகுதி நீதிமன்றங்களில் தமிழில் எல்லாவற்றையும் நடத்தும் உரிமையைத் தமிழருக்குக் கொடுத்துவிட்டோம் என்று கூறிக்கொண்டு தமிழ்தெரியாத நீதவான்களை தமிழ்ப்பகுதிகளில் நியமிப்பது தான் தமிழ்மக்களுக்குச் சம உரிமை கொடுப்பதா? தமிழர்களுக்கு ஆட்சி உரிமைஇருப்பின் இத்தகைய செயல்கள் நடைபெறுமா?

பொலிசுப் பரிசோதகர் நாயகம், சுகாதாரசேவைப் பணிப்பாளர் முதலிய பதவிகளுக்கு தகுதியும் உரிமையுமுடைய தமிழர்கள்புறக்கணிக்கப்பட்டுச் சிங்களவர் நியமிக்கப்பட்டதேன்?

குடியேற்றத்திட்டங்களில் சிங்கள மக்களுக்குக் கொடுக்கப்படும் வசதிகள் தமிழ் மக்களுக்குக் கொடுக்கப்படவில்லையே! அரசகாணிகளில் அடாத்தாகக் குடியேறும் சிங்களவர்களுக்கு அக்காணிகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் அடாத்தாகக் குடியேறிய தமிழர்கள் அடித்துக் கலைக்கப்படுகின்றனரே இதுதான் சம உரிமையா? திருகோணமலை நகரில் அடாத்தாகக் குடியேறியுள்ள சிங்கள மக்கள் ஏன் இன்னும் அகற்றப்படவில்லை? புள்ளிகள் தரப்படுத்தலை நீக்கிவிட்டோம் என்று பகிரங்கமாகக்கூறிவிட்டு இன்னும் முழுதாக நீக்காமல் இருக்கும் அரசாங்கம் சமஉரிமை, சமவாய்ப்புப் பற்றிப் பேசமுடியுமா?

இந்த ஆண்டில் நியமனம் பெற்ற உதவித் தபால அதிபர்கள், உதவி புகையிரத நிலைய அதிபர்கள், இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்கள், காப்புறுதிக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் முதலானோரில் தமிழ் மக்களின் தொகை விகிதப்படிதானும் தமிழர்கள் நியமிக்கப்பட்டார்களா? சில துறைகளில் மொத்தத்தில் மூன்று நாலு வீதம் நியமிக்கப்படவில்லையே?

வெளிநாட்டுப்பண உதவிகள் யாவும் சிங்களப்பகுதிகளுக்குக் கிடைப்பதைப் போலத் தமிழ்ப்பகுதிகளுக்குக் கிடைக்கின்றனவா? குருநாகல் முதலிய மூன்று மாவட்டங்களின் அபிவிருத்திக்குப் பிறநாட்டுதவி இப்பொழுது கிடைத்துள்ளது. தமிழ்ப்பகுதிகளுக்குக்கிடைத்த நோர்வே நாட்டு உதவியை அரசாங்கம் பொருத்தமற்றகாரணங்களைக் கூறித் தடுத்துவிட்டது.

பிரதமர் போன்ற சிங்களத் தலைவர்கள் இந்தநாட்டிலே தமிழர்களை அடிமை நிலைக்குத் தள்ளிவிட்டு எல்லோரும் சமம் என்று பேசுவது தர்மிஷ்டப் பேச்சாகாது" (உ)

Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
Great Scout
Family Entertainment

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம் ஜி. ஆர்-விஜயா
நல்லநேரம்

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவகுமார்-லோறன்ஸ்
மேல்நாட்டு மருமகள்

## சமூகசேவைகள் இயக்கம் கோரிக்கை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு வாவியில் வலைகட்டிறவுப்பகுதியில் வலைகட்டிஇருல்பிடிப்பதைத் தடை செய்யுமாறு மாவட்ட அரசாங்க அதிபருக்கு வவுணதீவு சமூகசேவைகள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த சில வருடகாலமாக இவ்வாறு இருல் பிடிக்கப்படுவதால் வீச்சுத் தொழிலை ஜீவனோபாயமாகக் கொண்டுள்ள மீனவர்கள் தொழில் வாய்ப்பிழந்துவருவதாக அக்கோரிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [உ]

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m.
SOPHIA LOREN in
'Scandal in Sorrento' [Colour Scope]

175வது தின வெள்ளி விழாவை நோக்கி வீறுநடை போடுகிறன்.
தினசரி 4 காட்சிகள்
ராணி [யாழ். நகர்]
சிவாஜி-மஞ்சுளா நடித்த
உத்தமன் (ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
பாலாஜி - விஜயகுமாரி நடித்த
போலீஸ்காரன் மகள்
(புத்தம் புதிய பிரதி)

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
நிலவே நீ சாட்சி
(புதியபிரதி)

லிடோ (யாழ். நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
எங்கள் தங்க ராஜா

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30 & 9-45
எம். ஜி. ஆர். --- சரோஜாதேவி நடித்த
திருடாதே [புதிய பிரதி]

சாந்தி (யாழ்ப்பாணம்)
போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
2-வது ஜனத்திரள் வாரம்
ஏ. வி. எம். ராஜன், நிர்மலா, சந்திரபாபு, மனோரமா
அவள் புதிய பிரதி வண்ணப்படம்

ராஜா (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
ஃ மரிக்கார் ராமதாஸ்
ஃ ஹெலன்குமாரி
செல்வசேகரன்-சிவராம் - ஜவாகர்-ராஜகோபால்
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏமாளிகள்

வின்ஸர் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஃ சிவராம் ஃ சந்திரகலா ஃ தனரத்தினம்
ஃ செல்வம் பெர்னாண்டோ ஃ டொன்பொஸ்கோ
ஆகியோர் நடித்த
சமத்கார பிலிம்ஸ்
அநுராகம்

# சென். பற்றிக்ஸ் வெற்றி

## சென். ஹென்றிஸ் வெளிநடப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் முதற்பிரிவில் சென். பற்றிக்ஸ் கோஷ்டி 2-0 கோல்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டி, ஆரம்பத்திலிருந்து முடிவடையும் வரை ரசிகர் மத்தியில் பெரும் பரபரப்பையே ஏற்படுத்தியவண்ணம் இருந்தது இப்போட்டியில் இரண்டு கோஷ்டி வீரர்களும் அடிக்கடி முறைதவறி விளையாடியதனால் மத்தியஸ்தரின் எச்சரிக்கைக்குப் பல தடவைகள் ஆளானார்கள். இடைவேளைக்கு முன்பாகவே சென். பற்றிக்ஸ் 2-0 கோல்களால் முன்னணியில் நின்றது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி 18 நிமிடங்களின் பின் சென். ஹென்றீஸ் கோஷ்டியினர் ஒரு கட்டத்தில் மத்தியஸ்தரின் தீர்ப்பை எதிர்த்து மைதானத்திலிருந்து வெளிநடப்புச் செய்தார்கள். மத்தியஸ்தர், அவர்களை மைதானத்திற்குள் வரும்படி அழைத்தபோதும் அவர்கள் மைதானத்திற்குள் வர மறுத்துவிட்டார்கள். இதனால் மத்தியஸ்தர் ஆட்டம் முடிவடைந்ததாக அறிவித்தார். இச்சந்தர்ப்பத்தில் பலத்த மழையும் பெய்யத் தொடங்கியது.

மேற்படி போட்டிக்கு முன் நடைபெற்ற 2ம், 3ம் பிரிவுப் போட்டிகள் இரண்டிலும் சென். ஹென்றீஸ் கல்லூரிக் கோஷ்டிகளே வெற்றிபெற்றன.

இப்போட்டி சென். பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

## யாழ். பொலிஸ் அகில இலங்கைச் சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைப் பொலிஸ் இலாகாவினால், மாவட்டப் பொலிஸ் தெரிவுக் கோஷ்டிகளிடையே நடாத்தப்பட்ட 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டியில், யாழ் மாவட்டத் தெரிவுப் பொலிஸ் கோஷ்டி சாம்பியன் வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிக்கொண்டது.

மேற்படி நொக்கவுட் போட்டியில் யாழ். தெரிவுப் பொலிஸ் கோஷ்டியும், மவுண்ட்லவேனியாப் பொலிஸ் கோஷ்டியும் சாம்பியன் மோதலில் மோதியபோது யாழ். தெரிவுப் பொலிஸ் கோஷ்டி மிகவும் திறமையாக விளையாடி 4-0 கோல்களால் வெற்றி பெற்றுச் சாம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

யாழ். தெரிவுப் பொலிஸ் கோஷ்டிக்குத் தற்போதைய ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். ஸ்ரீதரன் தலைமைதாங்கினார். இவர், முன்னாள் அகில இலங்கை உதைபந்தாட்ட வீரரென்பது குறிப்பிடத்தக்கது.

## நெல்லியடி ம. ம. வி. வெற்றி

(யாழ் .விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடாத்திய உதைபந்தாட்டப் போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியை 4-1 கோல்களைப் போட்டு வெற்றியீட்டியது.

## ஒஸ்மானியா வெற்றி

ஒஸ்மானியாக் கல்லூரிக்கும். நடேஸ்வராக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஒஸ்மானியாக் கல்லூரி, நடேஸ்வராக் கல்லூரியை 2-0 கோல்களால் வெற்றியீட்டியது.

## ஹாட்லி வெற்றி

(புலோலி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டியின் இரண்டாவது குழு, யாழ். பரியோவான், தெல்லிப்பழை மகாஜனா, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரிக் கோஷ்டிகளுடன் மோதி, யாவற்றிலும் வெற்றியீட்டியுள்ளது.

## இராசிப்பலன் இன்றைய

ஐப்பசி மாதம் 16-ந் திகதி
வியாழக்கிழமை
(2-11-78)

**மேடம்:-** இல்லம் பல்கலைக் கழகமாக மாறும். அறுஞர் வருகை உங்களை உற்சாகப்படுத்தும் சாஸ்திர வழியாலும் கண்ணியம் சேருவதற்கிடமுண்டு.

**இடபம்:-** தொல்லைகள் தலைதூக்கும் தொழில் புரியும் இடத்தில் ஏமாற்றத்திற்கிடமுண்டு. அவசர முடிவைத் தவிர்ப்பதுடன் உடல் நலத்தையும் பேணவும்.

**மிதுனம்:-** இதயப் படுதாவில் இன்பத்தின் மின்னல். பிதாதழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். பொதுப் பணிகளில் நாட்டம் பிறக்கும். சிறப்பான தினம்.

**கடகம்:-** இதமான வாழ்வு செய்தொழிலால் சிறப்புக்கிடமுண்டு. மேலதிகாரிகளின் உதவிகிட்டும் சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம்.

**சிங்கம்:-** வணிகத்துறையில் புதிய வாய்ப்புக்கள் ஏற்படும். புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். பிறபொருள் வரவிற்கும் இடமுண்டு.

**கன்னி:** எவரிடத்திலும் அதிகநம்பிக்கை வைக்க வேண்டாம். பணம்விரையமாவதற்கிடமுண்டு கடற்பிரயாணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும் நிதானம் வேண்டும்.

**துலாம்:** தேனுக இனித்தது வேம்பாகக் கசக்கக் கூடும். அதிக சிந்தனைக்கு இடமளியாது அமைதியுடன் இருக்கவும், தெய்வநம்பிக்கை நன்று.

**விருச்சிகம்:-** இனியவார்த்தைகளின் மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள். பொருள் வரவிற்கிடமுண்டு. மதிப்பு உயரும் நல்லநாள்.

**தனுசு:-** குடும்பத்தில் சுகக் குறைவுகள் தென்படும். அதிக அலைச்சலின் மூலம் கவலைகள் உருவாகும். அடக்கம் நன்று.

**மகரம்:-** வாகனச் சொந்தக்காரர்களுக்கு மகிழ்ச்சி தென்படும். தாய்வழி மூலம் தனவரவிற்கு இடமுண்டு. குடும்பத்திலும் சுமூகமான நிலை தென்படும்.

**கும்பம்:-** பிள்ளைப்பாசம் தலைதூக்கும். சமயோசித நடவடிக்கையின் மூலம், எதையும் சமாளிப்பீர்கள் மகிழ்ச்சிகரமான தினம்.

**மீனம்:-** பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும் அரசபயத்திற்கு இடமேற்படுமாகையால் வழக்கு விவகாரங்களைத் தவிர்க்கவும் அமைதி நன்று.

சோதிடகலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## அபராதம்

[பண்டத்தரிப்பு]

இரவு நேரத்தில் சைக்கிளில் வெளிச்சம் இல்லாது வீதிகளில் பிரயாணம் செய்துகொண்டிருந்த 42 பேரை சுன்னுகம் பொலிசார் கைது செய்து மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் ஆஜர் செய்தபோது நீதிபதி ஒவ்வொருவருக்கும் தலா 25 ரூபா அபராதம் விதித்தார்.

## சம்பளப் பணம் கொள்ளை வழக்கு

(புலோலி)

பருத்தித்துறை மகளிர் கல்லூரி சம்பளப் பணம் கொள்ளை சம்பந்தமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இருவர் தவிர்ந்த ஏனைய 10 சந்தேகநபர்களும் பருத்தித்துறை நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டனர்.

அருள் தேவரத்தினம், வசந்தராசா ஆகிய இருவரையும் பிணையில் செல்ல அனுமதிப்பது பற்றி ஆராய்வதாகவும், சந்தேகநபர்கள் பற்றிய அறிக்கை ஒன்றைப் பொலிசார் சமர்ப்பிக்கவேண்டுமெனவும் நீதிபதி உத்தரவிட்டார்.

மேல்விசாரணை இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டது.

## பொலிசார் நடவடிக்கை

(நெல்லியடி)

மாலை வேளைகளில் தேவையற்று வீதிகளிலும் சந்திகளிலும் நிற்கும் இளைஞர்கள் மீது பருத்தித்துறைப் பொலிசார் நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். கூட்டம் கூட்டமாக தேவையற்று நிற்போரைக் கலைப்பதுடன் வெளிச்சமின்றி சைக்கிளோட்டுவோர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

நெல்லியடிச்சந்தி, வதிரிச் சந்தி, கோயிற்சந்தையடி, மந்திகை போன்ற சந்திகள் பொலிசாரின் தீவிர கண்காணிப்புக்குள்ளாகியுள்ளன. (உ)

## ஓராண்டு நினைவு தினம்



எம்.வி. ஆசீர்வாதம் J.P.

தோற்றம் — மறைவு
6-1-1918 2-11-1977

எம் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எம்மை ஆருத்துயரில் விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றிடினும் உம் நினைவு நீங்காது தவிக்கின்றோம். இவரின் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவுத் துயரிலிருக்கும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரர், உறவினர்.

0694

# "அபயம் கேட்ட எனக்கு பொலிஸ் 'பெல்ட்' அடி கிடைத்தது"

## சன்சோனிக்கமிஷன் விசாரணையில் சாட்சியம்

(திருமலையிலிருந்து நமது மூதூர் நிருபர்)

''அபயபுரத்தில் வெட்டிக் கொல்லப்பட்டநிலையில் எனது சகோதரன் கிடப்பதாகக் கேள்வியுற்று சடலத்தை மீட்கச் சென்ற என்னைச் சிங்களக் காடையர் துரத்திவருவதாக அவ்வழியே சென்ற பொலிஸ் ஜீப்பை மறித்து இன்ஸ்பெக்டரிடம் கூறினேன். இத் தருணம் ஜீப்பில்இருந்த பொலிஸ் கொஸ்தாப்பு பெரேரா என்னைத் தனது பெல்டைக் கழற்றித் தாக்கினார்'' இவ்வாறு திருமலை நகரமண்டபத்தில் சன்சோனிக்கமிஷன்முன் சாட்சியமளித்த திருமலைக்கட்டடத் திணைக்களத் தொழிலாளி திரு. இராசையா சகாதேவன் (26 வயது) கூறினார்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில்கூறியதாவது:

''நான் பாலையூற்றுப்பகுதியில் வசித்துவந்தேன். 1977ம் ஆண்டு ஆகஸ்ட் 22ம்திகதி பிற்பகல் 2 மணி அளவில் வேலை விட்டு வீட்டிற்கு வந்தேன். சுமார் 3-30 மணிஅளவில் எனது ஒன்றுவிட்டசகோதரன் திரு. பொன்னையா செல்வநாயகம் அபயபுரம் என்றஇடத்தில் கொலை செய்யப்பட்டிருப்பதாகக் கேள்வியுற்றேன்

''எப்படியும் உண்மையறிய வேண்டும் என்று சம்பவம் நடந்ததாகக் கூறப்பட்ட இடத்தை நெருங்கியபோது ஓர் சடலம் தெருவில் கிடப்பது தெரிந்தது. என்றாலும் 15க்கு மேற்பட்ட சிங்களக்காடையர்கள் அந்த இடத்தில் ஆயுதங்கள் தாங்கியவர்களாக நின்றதால் நான் அந்த இடத்திற்குப் போகவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் விமானப்படையினரின் ஜீப்வண்டி ஒன்றுஅவ்வழியாக வந்தது. உடனே நான் ஜீப்வண்டியை மறித்து விஷயத்தைக்கூற அவர்கள் அந்த ஜீப்வண்டி மூலம் என்னைச்சடலம் கிடந்த இடத்திற்குக் கொண்டு போய் விட்டனர். அங்கு கிடந்தது எனது சகோதரனின் சடலமே.

''சடலத்தல்வெட்டுக்காயங்கள் இருப்பதையும் நான் கண்டேன். இத்தருணம் சில சிங்களவர் வெறித்தனமாக என்னைத் துரத்திவந்தனர். நான் ஓட்டம் எடுத்தேன். நான் ஓடும் சமயம் அவர்கள் எனது சகோதரனின் சடலத்தைத் தூக்கி வீதி ஓரத்தில் போட்டனர். இதையும் நான் கவனித்தேன்.

இதேவேளை பொலிஸ் ஜீப் வண்டி ஒன்று அவ்வழியால் வந்தது. நான் அதை மறித்து ஜீப்பில் வந்த இன்ஸ்பெக்டரிடம் நடந்துள்ளதையும் என்னைக் காடையர்கள் துரத்துவதையும் கூறினேன். அத்தருணம் ஜீப்வண்டியில் இருந்த பொலிஸ் கொஸ்தாப்பு பெரேரா தனது பெல்டைக் கழற்றி அதன்மூலம் என்னைத் தாக்கினார்.

இப்படிப் பொலிசாரே செய்வதால் மேற்கொண்டு ஸ்தலத்தில் நிற்பது ஆபத்து என அறிந்து தப்பி ஓடுவதே புத்திசாலித்தனம் என நினைத்து தப்பி ஓடினேன்.

ஆகஸ்ட் மாதம் 26ந் திகதி சடலத்தை அடக்கத்திற்காகத் தந்தனர்.

இறந்தவரின் மனைவி பிள்ளைகள் சகலரும் யாழ்ப்பாணத்தில் இருந்ததால் சடலத்தை யாழ்ப்பாணம் கொண்டுபோக அனுமதி கோரிநின்றோம். அந்த அனுமதி மறுக்கபபட்டது. இதனால் இறந்தவரின் மக்கள் இல்லாமலே பிரேதஅடக்கம் நடந்தது என்றார். (அ)

# மற்றொரு அணிவகுப்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடைக் காவலாளி கந்தசாமி இராமலிங்கம் இவரை அடையாளம் காண்பதில் ஈடுபட்டு அடையாளம் காணாமையால் இக்குற்றச்சாட்டிலிருந்தும் சந்தேகநபர் விடுவிக்கப்பட்டு, ஏனைய சம்பவங்கள் தொடர்பான அடையாளஅணிவகுப்பு இன்று 2ம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

மல்லாகம் பதில் நீதிபதி திரு. அ. குமரகுரு முன்னிலையில் நடைபெற்ற இவ்வடையாள அணிவகுப்பிற்கு சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் முந்திய அணிவகுப்பின்போது தெரிவித்த ஆட்சேபனைகளைத் தெரிவித்த போது பதில் நீதிபதி அவற்றைப் பதிவு செய்தார். சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினத்துடன் சட்டத்தரணிகள் எஸ். புண்ணியமூர்த்தி, மு. திருநாவுக்கரசு, எஸ். சிவபாக்கியநாதன் ஆகியோரும் ஆஜராகினர். பொலிஸ் சார்ஜன்ட் திரு. குலசிங்கம் பொலிஸ் தரப்பில் ஆஜரானார்.

# இன்ஸ்பெக்டர், கான்ஸ்டபிள் மீதான வழக்கு

(மாவிட்டபுரம்)

சங்கானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. ரி. ஜே.மிஸ்கின், கான்ஸ்டபிள் ஸ்ரீவன் ஆகியோருக்கெதிராக தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக இவ்விருவரும் இன்று மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜராவர்.

சங்கானை பொலிஸ் பொறுப்பதிகாரி மிஸ்கினும், கான்ஸ்டபிள் ஸ்ரீவனும்சந்தேகநபரான அளவெட்டியைச் சேர்ந்த சரவணமுத்து சற்குணசிங்கம் என்பவரை துப்பாக்கியால் சுட்டும், குண்டாந்தடி, துப்பாக்கிப்பிடி, கைகள் ஆகியவற்றால் தாக்கியும் காயம் விளைவித்ததாக சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினத்தினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட சமயம் திரு. மிஸ்கின் சமூகமளிக்காது அதற்கான காரணமும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கடபட்டதால் வழக்கு இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டது.


**CLASSES**

Law College Entrance Examination 1979. Classes by experienced Lecturers. Commencing on 9th Dec. External Studies Organization 148/1, Stanley Road, Jaffna. Phone; 7715 0717



**உடன் விற்பனைக்கு**

1. JVC ரியூனர் / அம்பிளிபயர் - 50 Watts
2. ஸோனி ஸ்பீக்கர்கள் (பெட்டி)
3. பயனியர் கஸட் டெக் (DOLBY SYSTEM)

புத்தம் புதியவை - விபரங்களுக்கு

86, முதலாம் குறுக்குத் தெரு,
(மெயின் வீதிக்கு அருகாமை)
யாழ்ப்பாணம். 0713


# சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

நேற்று முன்தினம் இழுக்கப்பட்ட 637-வது தேசிய லொத்தர்சபை முடிவுகள் வருமாறு:

| | |
|---|---|
| முதலாவது பரிசு | |
| 27 K 0293 | ரூபா 1,00,000 |
| இரண்டாவது பரிசு | |
| 15 K 0470 | ரூபா 40,000 |
| மூன்றாவது பரிசு | |
| 33 O 0720 | ரூபா 10,000 |

தலா ரூபா 1717-50 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு:

| | |
|---|---|
| 26 A 0255 | 15 A 0404 |
| 05 A 0575 | 30 B 0602 |
| 03 B 0266 | 24 B 0460 |
| 11 B 0953 | 25 C 0782 |
| 29 D 0990 | 22 D 0120 |
| 25 D 0954 | 07 D 0244 |
| 13 D 0832 | 27 E 0995 |
| 10 E 0864 | 05 G 0713 |
| 29 G 0944 | 27 H 0246 |
| 10 H 0841 | 02 H 0403 |
| 15 H 0793 | 28 H 0359 |
| 16 H 0059 | 02 H 0657 |
| 30 H 0460 | 25 J 0352 |
| 05 J 0297 | 19 J 0058 |
| 26 J 0148 | 17 K 0104 |
| 31 K 0321 | 19 K 0070 |
| 21 K 0024 | 17 L 0551 |
| 33 L 0900 | 14 L 0742 |
| 19 L 0387 | 30 M 0104 |
| 07 M 0988 | 04 M 0291 |
| 01 N 0462 | 30 N 0889 |
| 21 O 0795 | 31 O 0325 |
| 30 O 0628 | 07 O 0902 |
| 07 O 0491 | 25 O 0878 |
| 19 O 0482 | 04 O 0424 |
| 12 O 0015 | 04 O 0091 |
| 04 P 0557 | 10 P 0113 |
| 01 P 0755 | 09 Q 0535 |
| 03 Q 0453 | 06 Q 0691 |
| 13 Q 0343 | 34 R 0182 |
| 12 R 0541 | 15 R 0626 |
| 10 R 0921 | 19 R 0974 |
| 27 S 0267 | 18 S 0043 |
| 22 T 0505 | 18 T 0611 |
| 12 T 0071 | 27 T 0790 |
| 03 T 0662 | 03 T 0705 |
| 12 T 0933 | 03 T 0938 |
| 25 U 0361 | 30 U 0434 |
| 24 U 0738 | 05 U 0326 |
| 22 U 0522 | 10 V 0932 |
| 16 V 0085 | 16 V 0114 |
| 19 V 0343 | 23 W 0959 |
| 15 W 0446 | 19 X 0270 |
| 33 X 0678 | 05 X 0364 |
| 27 Y 0051 | 29 Y 0347 |
| 14 Y 0007 | 09 Y 0292 |
| 21 Z 0007 | 25 Z 0013 |
| 22 Z 033 | 03 Z 0211 |
| 11 Z 0829 | 04 Z 0180 |
| 09 Z 0945 | 22 Z 0160 |

(இவை யாவும் உறுதிப் படுத்தப்படவேண்டும்)

# விவாதத்தை ஒத்திவைக்க...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

னைக் கவனியாது அரசு தனது மூன்றில் இரண்டு அதிகப்படியான வாக்குப்பலத்தைக் கொண்டு மசோதாவை நிறைவேற்றக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கு பிரதம மந்திரி பதிலளிக்கையில் மசோதா மீதான விவாதத்தில் அரசாங்க தரப்பினரும் அமைச்சர்களும் இன்று பேசுவார்கள் எனறும் அவைகளைக் கேட்ட பின் எதிர்க் கட்சியினர் 7ம் திகதி தம் கருத்துக்களைக் கூறலாம் என்றும தெரிவித்தார்.

சாவகச்சேரி உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பி, இந்த மசோதாவின் சிற்பியான கல்வி அமைச்சா இப்பொழுது நாட்டில் இல்லை முக்கியமான இந்த மசோதா விவாதிக்கப்படும் நேரத்தில் அவர் சபையில் இருக்கவேண்டும். ஆனல் அவரை வெளிநாட்டிலிருந்து திருப்பி அழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டால் இதற்குப் பிரதம மந்திரி பதிலளிக்கையில் பதில் கல்வி அமைச்சர் திரு. லயனல் ஜயத்திலகாவும் தகுதியுள்ள அமைச்சர்தான் என்றும் விவதத்தைத் தொடர்ந்து நடத்தலாம் என்றும் தெரிவித்தார்.

## 6 பல்கலைக்கழகங்கள்

இதன்பேரில்பதில்கல்வி அமைச்சர் திரு. லயனல் ஜயதிலகா பேசினார்.

உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்புக்கமைய சட்டத்தில் திருத்தம் செய்யப் படுமென்றும் அவசரப்பட்டு சட்டத்தைக் கொண்டுவர அரசு விரும்பவில்லையென்றும் அவர் கூறினார்.

நாட்டிலுள்ள ஆறு பல்கலைக்கழக வளாகங்களும் தனித்துவமான இறைமையுள்ள பல்கலைக்கழகங்களாக மாற்றப்படும்.

பல்கலைக்கழக மாணவர்கள் அரசியல்வாதிகளால் கைப்பொம்மைகளாகப் பயன்படுத்தப்படுவது நீக்கப்படும்.

பல்கலைக்கழகங்களில் 'ராக்கிங்' நடைபெறுவதையும், அரசியல்வாதிகள் தலையிடுவதையும் பெற்றோர் விரும்பவில்லை.

இதைத் தொடர்ந்து திரு. அனுரா பண்டாரநாயக்கா பேசினார்.

இந்த மசோதா விவாதிக்கப்படும் வேளையில் கல்விஅமைச்சர் சபையில் இல்லாததை அவர் குறை கூறினார்.

பல்கலைக்கழகங்களின் வேந்தர்களை ஜனாதிபதி நியமிப்பார் என்று இருக்கிறது. ஆனல் அவர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருப்பார்கள் என்று கூறப்படவில்லையென்றார்.

ஒருகட்டத்தில் அமைச்சர்கள் தொடர்ந்தும் பதவியில் இருக்கப போவதாக எண்ணக்கூடாது. எங்களிலும் சிலர் அப்படி எண்ணி இருந்தார்கள் என்று திரு, அனுரா பண்டாரநாயக்கா கூறிய போது அமைச்சர் திரு. தொண்டமான் குறுக்கிட்டு இப்பொழுதாவது அதை நீங்கள் உணர்கிறீர்களே என்றார்.

அதற்கு திரு, பண்டாரநாயக்கா, நான் உங்களைக் கூறவில்லை. நீங்கள் ஜனநாயகத்தை நன்கு உணர்ந்தவர் மூன்று காலங்களையும் நன்கு உணர்ந்த அமைச்சர் நீங்கள் என்றார் (ம)

# சுதந்திர...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இலக்ரோனிக் சாதனங்கள் தொடர்பான திட்டமொன்றில் 3000 பெண்களுக்கு வேலை கிடைக்கும்

இந்த விபரங்களை நேற்று சுதந்திர வர்த்தக வலய நிர்வாக அதிபர் திரு உபாலி விஜயவர்த்தன பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் வெளியிட்டார் [ம]

# கட்டிடத் திறப்பு விழா

(நாயன்மார்கட்டு)

நாயன்மார்கட்டு சனசமூக நிலைய புதிய கட்டிடத் திறப்புவிழா இன்று மாலை யாழ். சைவசமய அபிவிருத்திக் சழக தலைவர் வித்துவான் திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமையில் நடைபெறவுள்ளது.

வாழ்த்துரைகளை யாழ். விசேட ஆணையாளர் திரு. க. சிவஞானம், சட்டத்தரணி திரு க. சற்குணநாதன், மயிலங்கூடல் பி. நடராசன் ஆகியோர் வழங்குவர். [செ]

# வரவேற்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு எம். பி. திரு. வே. ம. செல்லத்தம்பு, வட பிராந்திய போக்குவரத்து சபைத் தலைவர் திரு. கே. அமரசிங்கம், சபை உறுப்பினர் திரு. மகேந்திரன் செல்லத்தம்பு, மற்றும் உறுப்பினர் இ. போ. ச, உயர் அதிகாரிகளுக்கு இன்று மாலை முல்லைத்தீவில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

முல்லைத்தீவுத் தொகுதி கிராம முன்னேற்றச் சங்கத்தினரால் இந்த வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

புதுக்குடியிருப்புக் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. நீலகண்டன் தலைமையில் இந்த வரவேற்பு நடைபெறும்.

இதைத் தொடர்ந்து போக்குவரத்து வசதியீனங்கள்பற்றி பொது ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்.


# மரண அறிவித்தல்

## திருமதி சவிரிமுத்து யக்கோமுத்து

நவாலி தெற்கைச் சேர்ந்த திருமதி சவிரிமுத்து யக்கோமுத்து காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற சவிரிமுத்துவின் மனைவியும், உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியரும், காரைநகர் சீ-நோர் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனருமான ஸ்ரனிஸ்லாஸ், மன்னார் மாவட்ட மேலதிக பதிவாளர் அந்தோனிப்பிள்ளை, திருமதி யோசெப் அருந்ததி, செல்வி புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், லிலிதா புவனராணி, ஸ்டனிஸ்லாஸ், திருமதி பிலோமினா அந்தோனிப்பிள்ளை, அப்புத்தளை கிளனஞேர் தோட்டத்தைச் சேர்ந்த ஜேசெப் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரது பூதவுடல் இன்று (2-11-78) வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்கு நவாலி இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, நவாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

0718



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 889 - Registered as Newspaper in SriLanka.